# <u>பத்திரிக்கை குறிப்பு</u>

தர்மபுரி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகத்தை புகார்தாரர் அணுகி, தன்னுடைய அம்மா பெயரில் வாங்கிய 3 சென்ட் நிலத்திற்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய கோரி இணையதளத்தில் விண்ணப்பித்ததாகவும், மேலும் விண்ணப்பத்தின் தற்போதைய நிலையை அறிய ஜெர்த்தலால் கிராம நிர்வாக அலுவலகத்தை அணுகியதாகவும் அங்கிருந்த கிராம நிர்வாக அலுவலர் செல்வம், பட்டா பெயர் மாற்றம் செய்ய கையூட்டாக ரூ2500/- கேட்டு அதில் ரூ.500/-யை முன் பணமாக வாங்கிக்கொண்டு மீதமுள்ள ரூ2,000/- கொடுத்தால் தான் பட்டா பெயர் மாற்றத்திற்கு பரிந்துரை செய்வதாக கூறுவதாகவும், அதனால் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 28.06.2021 பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின்போது தர்மபுரி மாவட்டம், ஜெர்த்தலால் கிராம நிர்வாக அதிகாரி திரு.செல்வம், புகார்தாரரிடமிருந்து ரூ.2,000/- கையூட்டாக கேட்டு பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

# PRESS NOTE

The complainant approached Vigilance & Anti – Corruption, Dharmapuri detachment, and gave complaint that he had applied for patta name transfer for his mother's 3 cents land through online and approached the Zerthalal Village Administrative Office, Dharmapuri to know the stage of his petition. The Village Administrative Officer Tr.Selvam, demanded Rs.2,500/- as bribe for processing his application and had obtained an amount of Rs.500/- as advance and is demanding the remaining bribe amount of Rs.2,000/- for recommending the patta name transfer application. In this connection a case was registered and a trap was organized today, 28.06.2021.

During trap proceedings, the accused Tr.Selvam, Village Administrative Officer, reiterated his earlier demand and received the bribe amount of Rs.2,000/- from the complainant. The accused was caught red handed and arrested.